திறனற்ற 'டம்மி' முதலமைச்சர் ஆட்சியில்

அரிசி - மளிகைப் பொருட்கள் விலை வரலாறு காணா வகையில் உயர்வு!

சாமானிய மக்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு!



கோவை, நவ. 2-

அரிசி, மளிகை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கணிசமாக அதிகரித்துவருவது சாமானிய மக்களிடம் பொருளாதார சுமையை மேலும் கூட்டிவருகிறது.

தமிழகத்தில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக கணிசமாக அதிகரித்துவருகிறது. அரிசி, பருப்பு, எண்ணெய் என எந்த பொருளை எடுத்தாலும் விலை பல மடங்கு கூடியுள்ளதால் மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டிவருகின்றன.

இந்தாண்டு துவக்கத்தில், ரஷ்யா-, உக்ரைன், ஈரான்-, அமெரிக்கா நாடுகளிடையே கடுமையான போர் சூழலால் ஏற்பட்ட கச்சா எண்ணெய் தட்டுப்பாடு சர்வதேச அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெட்ரோல், டீசல் விலை உயர்வால் நம் நாட்டிலும் அத்தியாசிய பொருட்களின் விலை உயர்ந்தது.

பாமாயில் எண்ணெய் விலை லிட்டருக்கு ரூ.95லிருந்து 145 ஆகவும், சன் பிளவர் ஆயில் ரூ.130லிருந்து 190 ஆகவும் ஏப்ரல் மாதத்தில் உயர்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தற்போது பெட்ரோல் தட்டுப்பாடு பிரச்சினை படிப்படியாக ஓய்ந்தாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலை கணிசமாக தமிழகத்தில் அதிகரித்துவருகிறது.

அதாவது, அரிசி விலையானது இது வரை இல்லாத அளவுக்கு கிலோவுக்கு ரூ.10 வரை அதிகரித்துள்ளது. அதே போல், பெரும்பான்மையான மளிகைப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. மாத சம்பளம் வாங்கும் சாமானிய மக்களுக்கு பொருளாதார சுமையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு பருவ மழை பொய்த்து போனதை முக்கிய காரணமாக வியாபாரிகள் முன்வைக்கின்றனர்.

இவ்வளவு விலை உயராது!

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்டச் செயலாளர் கணேசன் கூறிய தாவது:-

மளிகைப் பொருட்கள் விலை உயர்வில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக ஏற்றம் காணப்படுகிறது. குறிப்பாக, சன் பிளவர் ஆயில் 90 சதவீதம் வெளியே இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. சில சமயங்களில் போர் சூழல் இதன் விலையை நிர்ணயிக்கிறது.

கடந்த மாதம் லிட்டர் ரூ.160க்கு விற்ற சன் பிளவர் ஆயில் தற்போது ரூ.165க்கு விற்கிறது. பாமாயில் ரூ.125 என விலையில் மாற்றமில்லை. தேங்காய் எண்ணெய் ரூ.280லிருந்து தற்போது ரூ.290 ஆகவும், நல்லெண்ணெய் ரூ.300லிருந்து ரூ.320 ஆகவும், கடலை எண்ணெய் ரூ.200லிருந்து ரூ.210 ஆகவும், நெய் ரூ.800லிருந்து ரூ.850 ஆகவும் அதிகரித்துள்ளது.

அதேபோல், மளிகைப் பொருட்களின் விலை ரூ.25-100 வரை கிலோவுக்கு அதிகரித்துள்ளது. ஒரு கிலோ இஞ்சி ரூ.160 வரையும், பூண்டு ரூ.280 வரையும் விற்பனையாகிறது. வழக்கமாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் பருப்பு உள்ளிட்ட புதிய மளிகைப் பொருட்களின் வருகை இருக்கும். வரத்தை பொறுத்து அதன் விலை இருக்கும்.

வரத்து குறைந்த பொருட்களின் விலை ரூ.5-10 வரை உயரும். ஆனால், இவ்வளவு விலை ஏற்றம் இதுவரை ஏற்பட்டதில்லை. மழை சீராக இல்லாததால் விளைச்சல் குறைந்துவிட்டது. சமீபத்தில் நல்ல மழை பெய்ததால் டிசம்பர் 15ம் தேதிக்கு மேல் மளிகைப் பொருட்களின் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.

அரிசி விலை அதிகரிப்பு!

'கடந்த மாதம் ரூ.2,000க்கு விற்ற முதல் தரம் பொன்னி(26 கிலோ) தற்போது ரூ.2,250-2,300 வரையும், பி.பி.டி. பொன்னி ரூ.1650லிருந்து தற்போது ரூ.1,900-2,000 வரையும், இட்லி அரிசி ரூ.1,000லிருந்து தற்போது ரூ.1,150 ஆகவும், பச்சரிசி ரூ.900லிருந்து தற்போது ரூ.970 ஆகவும், சோனா மசூரி அரிசி ரூ.1,650லிருந்து தற்போது ரூ.1,900 ஆகவும் அதிகரித்துள்ளது. மேற்கு வங்கத்தில் இருந்து வரும் சீரக சம்பா விலையில்(கிலோ ரூ.130) எவ்வித மாற்றமும் இல்லை. சில்லரை விற்பனையில் கிலோவுக்கு ரூ.4 வரை அதிகரித்துள்ளது' என்கின்றனர் அரிசி வியாபாரிகள்.

இதுவரை இல்லாத விலையேற்றம்!

கோயம்புத்தூர் அரிசி வியாபாரிகள் சங்க செயலாளர் சரவணகுமார் கூறிய தாவது:-

ஆண்டுதோறும் அக்டோபர், டிசம்பர் வரை கிலோவுக்கு ரூ.4 வரை விலை வித்தியாசம் ஏற்படுவது வழக்கம். ஆனால் இதுவரை இல்லாத வகையில் இந்தாண்டு ரூ.10 வரை விலை உயர்ந்துள்ளது. கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு போன்ற தென் மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை பொய்த்து போனதே இதற்கு முக்கிய காரணம்.

வடகிழக்கு பருவமழை நன்கு பெய்துள்ளதால் தமிழகம், கர்நாடகாவில் விளைச்சல் அதிகரித்து அரிசி விலை சிறிது குறைய வாய்ப்புள்ளது. அடுத்தாண்டு ஜனவரி மாதம் அரிசி வரத்து இருக்கும் என்பதால் விலையேற்றம் சிறிது குறையும். அரிசி விலை கடந்த ஆக., முதலே உயர்ந்து வருகிறது; ஆனால், இப்போதுதான் தெரிகிறது. நாம் ஒன்றரை மாதங்களுக்கு தேவையான அரிசியை வாங்கி இருப்பு வைத்து விற்கிறோம்.

இருப்பு குறையும்போதுதான் பாதிப்பு வெளியே தெரிகிறது. முதல் தர அரிசிக்கு பெரும்பாலும் கர்நாடக மாநிலத்தையே நம்பி இருக்கிறோம். அங்கு மழை இல்லாத பட்சத்தில் இங்கும் பாதிப்பு ஏற்படுகிறது. தற்போது, ஆந்திரா நெல் சென்னை மார்க்கெட்களுக்கு வந்துகொண்டிருக்கிறது. இதனால் விலை சற்று குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.

நன்றி : **தினமலர்**
1.11.2026

மளிகை பொருட்கள் விலை உயர்வு பட்டியல்
(கிலோ ஒன்றுக்கு ரூபாயில்)

மளிகை பொருள்	கடந்த மாதம்	தற்போதைய விலை
குறு மிளகு	750	850
து.பருப்பு	140	165
உருட்டு உளுந்து	125	145
கருப்பு உளுந்து	100	110
சுண்டல் கடலை	100	120
பட்டாணி	60	70
வெள்ளை கடலை (காபுல்)	125	135
கடுகு	100	120
சீரகம்	300	360
வெந்தயம்	100	130
வரமிளகாய்	270	290
மல்லி	220	240
புளி (முதல் தரம்)	180	200
புளி (2ம் தரம்)	130	150
பொட்டு கடலை	110	130
தட்டை பயறு	100	140
பாசிப்பருப்பு	100	130

ஓடு, ஓடு என்று கைதிகள் தப்பி ஓடுகிறார்கள்!

நாட்றம்பள்ளி காவல் நிலையத்திலிருந்தும் கைதியோட்டம்!

நிர்வாகத் திறனற்ற 'டம்மி' முதல்வர் ஆட்சியில் நாள்தோறும் அரங்கேறும் அவலம்!

திருப்பத்தூர், நவ.2-

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் இருந்து, போலீசாரின் பிடியில் இருந்த கைதி தப்பியோடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் டம்மி முதலமைச்சர் விஜய் தலைமையில் ஆட்சி அமைந்ததும் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது.

குறிப்பாக தமிழ்நாட்டில் சிறையிலிருந்து கைதிகள் தப்பிக்கும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகிறது.

கடந்த அக்டோபர் 20 மற்றும் 21 ஆம் தேதி இரு நாட்களில் புழல் சிறையில் இருந்து 2 கைதிகள் அடுத்தடுத்த நாட்களில் தப்பி சென்றனர்.

அதற்கடுத்து தேனி மாவட்டம் தேக்கம்பட்டியில் மாவட்ட சிறையில் உள்ள 17 கைதிகள் சிறைக்காவலர்களை தாக்கிவிட்டு தப்பி சென்ற சம்பவம் தமிழ்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கோவை அன்னூர் காவல்நிலையத்தில் திருட்டு உள்ளிட்ட வழக்கில் ராகவன் என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

கைதான ராகவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்க அழைத்துவரப்பட்ட போது நேற்று இரவு சிறை வளாகத்தில் இருந்து தப்பியோடியுள்ளார்.

தப்பி சென்ற கைதி ராகவனை காவல் துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். இந்த சம்பவத்தில் கைதி ராகவனை அழைத்து சென்ற 4 சிறைக்காவலர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று (1.11.2026) திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அருகே, இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்ட சந்தோஷ் என்ற இளைஞரை , பொது மக்கள் தர்ம அடி கொடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணைக்காக நாட்றம்பள்ளி காவல்நிலையம் கொண்டு வரப்பட்ட கைதி சந்தோஷ், போலீசாருக்கு டிமிக்கி கொடுத்து அங்கிருந்து தப்பியோடினார். கைதியை பிடிக்க போலீசார் துரத்திய நிலையில், பொதுமக்கள் இளைஞரை மடக்கிப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

ஏற்கனவே த.வெ.க. ஆட்சியில் சிறை மற்றும் காவல்நிலையங்களில் இருந்து கைதிகள் தப்பியோடும் சம்பவங்கள் அரங்கேறும் வேளையில், தற்போது நிகழ்ந்திருக்கும் மற்றுமொரு சம்பவம் பொதுமக்களை முகம் சுளிக்க வைத்துள்ளது.

ஈரோட்டில் த.வெ.க. அரசைக் கண்டித்து மகளிரணியினர் ஆர்ப்பாட்டம்!


ஈரோடு, நவ. 2-

தவெக அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழக மகளிரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் ரீல்ஸ் தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை, கடுமையான விலைவாசி உயர்வை கண்டித்து ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழக மகளிரணி சார்பில் ஈரோடு தெற்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திலகவதி தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், முன்னிலையில் தலைமை கழக பேச்சாளர் நாகநந்தினி கண்டன உரையாற்றினார்.

ஆர்பாட்டத்தில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாச் சலம், மாவட்ட கழக நிர்வாகி கள் ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன், எம்.பி.அறிவானந்தம், ப.க.பழனிச்சாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், ஈரோடு மேயர் சு.நகரத்தினம், கீதா நடராஜன் வடக்கு மாவட்ட அமைப்பாளர் சவுண்டம்மாள் நகர மன்ற தலைவர்கள் சத்தியமங்கலம் ஜானகி ராமசாமி, பவானி சிந்தூரி இளங்கோ, தெற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பேபி, ஒன்றிய கழக செயலாளர்கள் ப. செங்கோட்டையன், சு.குணசேகரன், வ.கதிர்வேல், ஆர்.விஜயகுமார், இ.பெரியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; தேனி மாவட்டத்தில் ஜெயில்லே இருந்து 17 கைதிகள் தப்பிச்சாங்களே, அதுக்காக பெரிய போலீஸ் அதிகாரியை மாத்திட்டாங்க. ஜெயில் சூப்ரெண்டெண்டை சஸ்பெண்டு பண்ணிட்டாங்க. ஆனால் அமைச்சர்...

போண்டி : ஆமாய்யா; நீ என்ன சொல்ல வர்றேண்ணு தெரியுது. சம்மந்தப்பட்ட அமைச்சர் மேல நடவடிக்கை எதுவும் இல்லியேன்னு தானே. அவர் என்ன சாதாரண அமைச்சரா? 'நெளிவு சுளிவு' தெரிஞ்ச .... குமாராச்சே. யார் துறை மாறினாலும் (?) அவர் துறை மட்டும் மாறாது. ஆமாம். அவரைத் தொட்டாலே 'ஷாக்' அடிக்குமாம்.